ஸங்கீத
# ஸரிகமபதநி
அக்டோபர் – 2024

மலர் - 28 - இதழ் - 12

இசை - நாட்டிய மாத இதழ்

ரூ.30/-



வசுதா ரவி



செல்வி. அனுஷா சுரேஷ்

# ஸரிகமபதநி

இசை - நாட்டிய மாத இதழ்

மலர் - 28 இதழ் - 12

தலைமைப் புரவலர்

பத்மஸ்ரீ. டாக்டர்.

**நல்லி குப்புசாமி செட்டியார்**

தலைமை ஆசிரியர்

கலைமாமணி **ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்**

துணை ஆசிரியர்கள்

**சங்கர் வெங்கட்ராமன்**

**சிம்மம்குமார்**

**ஏவி. ஆர். வர்மா**

வடிவமைப்பு

**சி.ஜி.சுரேஷ்**

அச்சிடுபவர்

**டி.வேல்முருகன்,**

நியூ சித்ரா பிரஸ்

32, ஜீவரத்தினம் சாலை,

சென்னை-600081.

ஸரிகமபதநி பவுண்டேஷனுக்காக

வெளியிடுபவர்

**இராம. பாஸ்கர்**

**Contact : 86610 03627 (MSG)**

**E-mail**

**sangeethasarigamapadani@gmail.com**



**Our Sponsors**

**Nalli Chinnasamy Chetty**

Chennai - 600 017.


## நாதலய நாட்டிய அரங்கேற்றம்

“ஆடற்கலையே தேவன் தந்தது, தேவனின் ஆடலில்தான் ஜீவன் வந்தது”. தில்லைக் கூத்தன் ஆஹாய வடிவில் வீற்றிருக்கும் சிதம்பரத்தில் நாதலய நாட்டிய அரங்கேற்ற விழா, ஹோட்டல் சாரதாராம் – தர்பார் ஹாலில் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சின்ன மேளம் (பரதநாட்டியம்), பெரிய மேளம் (நாதஸ்வரம் – தவில்) இவை இணைந்து சங்கமிக்கும் நிகழ்வாக இவ் அரங்கேற்றம் நடந்தது பாராட்டிற்குரியது. சங்கீதப் பரம்பரையில் வந்த சின்னமனூர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இரண்டு மேளங்களிலும் பரிணமித்தது பார்க்க பிரமிப்பாக இருந்தது.

நமது பண்பாடு – கலாச்சாரம் – சமயத்தோடு நாட்டியத்தின் தொடர்பு இவற்றை ஒருங்கிணைத்து சின்னமனூர் சகோதரிகளான திருமதி.அட்ஷயா மகரஜோதி, செல்வி அனுஷா சுரேஷ் இவர்களின் நாட்டியம் காண்போரை பரவசத்திற்கு உள்ளாக்கியது. நல்ல லயம், நிதானமான காலப்ரமாணம், பாங்கான அபிநயம், கண்களும் கவி பாடியது இருவருடைய நாட்டியத்தில். இவர்களது பெரியம்மா சின்னமனூர் முனைவர் அ.சித்ரா அவர்களிடம் கடந்த 12 வருட காலமாக பரதக்கலை மற்றும் நட்டுவாங்கப் பயிற்சியினை எடுத்துக்கொண்டனர். ப்ரபந்தம், அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், பதவர்ணப் பிரதிபலிப்புகளால் திருச்செந்தூர் முருகனையே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள். தெருவில் வாரானோ பதம், எனை நீ மறவாதே அங்கயற்கண்ணி கீர்த்தனை, விருத்தம், காவடிச்சிந்து, தில்லானா போன்ற உருப்படிகள் மரபு மாறாத வகையில் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கு கொண்ட சின்ன மேளக் கலைஞர்கள் குரு. சின்னமனூர் முனைவர். அ.சித்ரா – நட்டுவாங்கம், சென்னை J.அரவிந்த் – வாய்பாட்டு, போழக்குடி GR.நவீன் – மிருதங்கம், செட்டிகுளம் Dr.C.S.வினோத் குமார் – புல்லாங்குழல், திருமதி. சுபஸ்ரீ சிவராமகிருஷ்ணன் – வயலின், பெரிய மேளக் கலைஞர்கள் சின்னமனூர் A.விஜயலக்ஷ்மி – நாதஸ்வரம், (அரங்கேற்ற நாயகிகளின் தாயார்), தேனி S.செல்வம் – தவில் என இரு மேளங்களின் சங்கமமாக நாதலய நாட்டிய அரங்கேற்றம் சீரும் சிறப்புமாய் நடந்தேறியது.

முன்னதாக, சிறப்பு விருந்தினர்களான சிதம்பரம் சப்–கலெக்டர் Rashmi Rani I.A.S., R.Ramanathan, Natyanjali Foundation, Chidambaram, Dr.Padmini Kabalimurthy, Dr. B. Rajamannan, Annamalai University ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து விழாவில் சிறப்புரை ஆற்றினார்கள்.

**– சேதுபதி**

# சிவன் போட்ட தோட்டம்!

இசை - நாட்டியக் கச்சேரிகளில் அதிகமாக உலா வருகிற ஒரு சங்கதி உண்டு என்றால் அது முத்துசாமி தீட்ஷிதர் இயற்றிய 'வாதாபி கணபதிம் பஜேஹம்' என்ற கீர்த்தனைதான்.

இப்பாட்டின் நிரவலுக்குப் பின் பாடப்படும் வசீகரமிக்க ஸ்வரப்பின்னல்கள், கோர்வைகள், வரிசைகள் ஆகியவை ரசிகர்களை மகுடிக்கு மயங்கியவர்களைப் போல ஆக்கக் கூடியவை. ஒவ்வொரு கச்சேரியையும் அதன் துவக்க கட்டத்திலேயே களைகட்ட வைக்க இந்த அம்சங்கள் உதவி புரிகின்றன.

மேற்படி ஸ்வரங்களை தற்போது புழங்கிவரும் வடிவத்தில் உரு கொடுத்து உருவாக்கியவர் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மகாவைத்யநாத சிவன் அவர்களே.

இவரின் 72 மேளகர்த்தா ராக மாலிகை, ராகதாள மாலிகா (108 தாளங்கள்) பிரசித்தமானவை; இவரது கச்சேரிகளில் சினிமா தியேட்டர்களில் உள்ளது போல் மாலை நேரத்தில் கால் மணி நேரம் இடைவேளை விடப்படும். காரணம், அந்த நேரத்தில் சிவன் அவர்கள் ஜபம் செய்துவிட்டு வந்து கச்சேரியை மீண்டும் தொடங்குவதற்குத்தான்.

தற்காலத்திய கச்சேரி வழிமுறை என்பது சிவன் அவர்கள் போட்டுக் கொடுத்த பாதைதான். அதற்கு முன்பெல்லாம் வேறு பாணி. ஜமீன்தார்கள், செல்வந்தர்கள் வீட்டு விசேஷங்கள், திருமணங்கள் போன்றவற்றில்தான் இசைக் கச்சேரிகள் நடைபெறும். உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு அழைப்பிதழ்களை அனுப்புவது போல வித்வான்களுக்கும் அனுப்பப்படும். இப்படி வருகிற வித்வான்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு துறைகளில் தனிப்பட்ட சிறப்பு பெற்று இருப்பர்.

ஒருவர் ராகத்தில் - மற்றவர் தாளத்தில் - இன்னொருவர் ஜாவளியில் - பிறிதொருவர் பல்லவியில் என பாண்டித்யம் பெற்று இருப்பார்கள். அப்போதெல்லாம் வீட்டு விசேஷங்கள் நான்கைந்து தினங்கள் கொண்டாடப்படும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறையில் சிறப்புள்ள கலைஞர்கள் தனித்தனியாக கச்சேரி வழங்குவார்கள்.

இப்படி இருந்த நிலையில் மகா வைத்திய நாத சிவனும் அவரின் சம காலத்தவருமான புல்லாங்குழல் சரப சாஸ்திரிகளும் தான் ஒரே கச்சேரியில் ராகம் - தாளம் - பல்லவி - க்ருதிகள் பாடும் முறையை புகுத்தினார்கள். 'சக்கனி ராஜமார்க்கம்' என்கிற இவ்வழக்கம்

**"ஒருவர் ராகத்தில் - மற்றவர் தாளத்தில் - இன்னொருவர் ஜாவளியில் - பிறிதொருவர் பல்லவியில் என பாண்டித்யம் பெற்று இருப்பார்கள்"**

பின்னாட்களில் அரியக்குடி ராமானுஜ ஐயங்காரால் மேலும் செப்பனிடப்பட்டது. காலப்போக்கில் அதில் இன்னும் சிறு மாறுதல்கள் உருவாகி ரசிகர்களின் ரசிப்புத் தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இன்றைய இசைக்கச்சேரி பாணி உருவானது.

எனவே, சங்கீத உலகம் மகா வைத்யநாத சிவனுக்கு பெரிதும் கடமைப்பட்டு உள்ளது. இவருடைய பாட்டு சிலிண்டரில் பதிவு செய்யப்பட்டு திருவாவடுதுறை மடத்தில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு அவற்றை இசை உலகிற்கு எடுத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

கேட்பவர்கள் அனைவரையும் மயங்கச் செய்யும் குரல் வளத்துக்குச் சொந்தக்காரர் மகா வைத்தியநாத சிவன். குரல் கெட்டு விடுமோ என்கிற அச்சத்தில் அதிர்ந்து கூட பேச மாட்டாராம். வெந்நீர் தான் அருந்துவார். முப்பதுக்கும் மேற்பட்ட சிஷ்யர்கள் திருவையாற்றில் இவரது வீட்டில் தங்கி இருந்து இலவசமாக சங்கீத சிட்ஷை பெற்றுள்ளனர்.

தனது சங்கீதத் திறமையால் இவர் பெற்ற பரிசுகள், தங்கத் தோட்டாக்கள், கங்கணங்கள், பதக்கங்கள் போன்றவற்றை எல்லாம் தனது சொந்தக் கிராமமாகிய வையச்சேரியிலுள்ள சிவன் கோயிலுக்கு காணிக்கையாகக் கொடுத்து விட்டார். 'மகா' பட்டத்துக்கு மிகவும் பொருத்தமான மாமேதைதான் வைத்தியநாத சிவன்.

●



முத்துசாமி தீட்ஷிதர்



வைத்தியநாத சிவன்



ராமானுஜ ஐயங்கார்


# திருவெண்காடு
# சுப்ரமணியப் பிள்ளை
## (26.04.1906 - 16.02.1966)



மேற்கு கோபுரவாசல்

**தி**ருவலம்புரம் மூவர் பாடல் பெற்ற திருத்தலம். இங்கு எழுந்தருளியிருக்கும் 'பிட்சாடனர்' அப்பரின் அருட்பாடலுக்கு ஏற்றபடி சிற்பியால் யாழ் மீட்டிவரும் திருக்கோலத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. **"முனிகனங்கள் புடை சூழத் தெறித்ததொரு வீணையராய்ச் செல்வர். வட்டணைகள் பல நடந்து மாயம் பேசி வலம்புர மேவுக்கு அங்கே மன்னினாரே"** என்பது அப்பர் வாக்கு.

இசையால் மயங்கச் செய்து முனிவர்களின் ஆணவத்தைப் பிச்சையாக ஏற்றார் என்பது செய்தி. இறைவன் இசை மயமானவன் என்பதனை அறிவூட்டிய நிகழ்ச்சிதான் இத் திருக் கோலத்தின் தத்துவம். இது காவிரியின் தென்கரையில் அமைந்த திருக்கோயில்.



உற்சவர் அகோரமூர்த்தி

திருவெண்காடு மூவர் பாடலும் பெற்ற காசிக்கு நிகரான பழம்பெரும் திருத்தலம். முத்தமிழ் போல் இங்கே மூன்று புண்ணியத் தீர்த்தங்கள், மூன்று தல விருட்சங்கள், மூன்று தெய்வத் திருக்கோலங்கள் என்று சிறப்புடைய திருத்தலம். 'இங்குள்ள இறைவன் பண்ணைப் படிக்கட்டும் இசைமயமானவன், பயிர்களை வளர்த்துக் காட்டும் மேகமானவன்' என்றார் அப்பர் பெருமான்.

இறைவன் மட்டுமல்ல, அவன் உறையும் இம் மண்ணும் கலை மலிந்ததுதான். இத் தெய்வீக மண்ணில் பரமநாதப் பிள்ளைக்கும், சுந்தராம்பாளுக்கும் பிறந்த குழந்தைதான் சுப்ரமணியன்.

தன் பால்ய வயதிலே சுப்ரமணியன் தன் சித்தப்பா சாமித்துரைப் பிள்ளையிடம் நாகசுரம் கற்றுக் கொண்டார். தன் ஏழாவது


டி.பி.எஸ்.

வயதிலேயே இக்கலையில் ஜொலித்தார். வழிவழியாக வந்த இசை மரபும், இயற்கையிலேயே அமைந்த கற்பனை வளமும், லய ஞானச் சிறப்பும் ஸ்வர சுத்தமான வாசிப்பும் இவரது குருகுல பயிற்சியின் சிறப்பியல்புகளாக அமைந்தது.

சுப்ரமணி பத்தோடு ஒன்று பதினொன்றாக நாகசுரக் கலையை கையாளவில்லை. தனக்கே உரிய ஆர்வத்தின் காரணமாக அதில் பல புதுமைகளைப் புகுத்தி கேட்பவர்களின் காதுகளுக்கும் - மனசுக்கும் இன்னும் எந்தளவு சுகானுபவத்தை தரமுடியும் என யோசித்து யோசித்து செயல்பட்டார். ஒரு வேளை அவர் கற்றுக் கொண்டதை மட்டும் வாசிப்பவராக இருந்து விட்டுப் போயிருந்தால் நூற்றாண்டு கடந்தும் அவர் பேசப்படுபவராக இருந்திருக்க வாய்ப்பில்லை.

இவர் கச்சேரி சூழலை கையாளும் விதமே அலாதியானது. 2 கட்டை சுதியில் ஆரம்பித்து முடிவில் 1 கட்டை சுதி அளவிற்கு குறைத்துக் கொண்டு தம்பூரா சுதியுடனும், வயலின், மிருதங்கம் இவற்றின் ஓசை நயத்திற்கு ஏற்பவும் நாகசுர நாதத்தை செம்மைப்படுத்தி மென்மையாக்கி வெளிப்படுத்திய பேராசான். அதுவரை இக்கலையில் இருந்த மேதைகள் யாரும் அணுகாத புதிய சித்தாந்தமாக அன்றைக்கு அது பேசப்பட்டது. இது தவிர நாகசுரக் கலையில் இன்னும் பல மேம்பட்ட அணுகுமுறைகளை அடுத்து வரும் கலைஞர்கள் பின்பற்றக்கூடிய பாடமாக்கி தந்து விட்டு போனவர் சுப்ரமணியன் என்றே சொல்லலாம்.

அக்காலங்களில் கோவில் நிகழ்ச்சிகளில்தான் பெரும் பெரும் நாகசுர கச்சேரிகள் நடக்கும். பக்தர்களில் அநேகர் சங்கீத ரசிகர்களாகவும் இருந்த கால கட்டம் அது. தெய்வ உலாக்களின் போது அந்தந்த தெய்வங்களுக்கு ஏற்ப பண்களை நெறிப்படுத்தி வாசிப்பதில் புதிய மரபையே உண்டாக்கியவர் சுப்ரமணியன்.

குறிப்பாக, அவரது திருவெண்காட்டில் நான்கு திருவீதிகளிலும் சுவாமி வலம் வரும் காலத்தில் வாசிக்க வேண்டிய இராகங்களை இவர்தான் முறைப்படுத்தினார். அகோர மூர்த்தியின் புறப்பாட்டில் ‘மோகனம்’ மட்டுமே வாசிப்பார். அந்த ராகமானது நீண்ட நேரம் விஸ்தாரமாக வாசிப்பதற்கு ஏற்ற ராகம் இல்லை

என்ற போதிலும் தன் கற்பனை வளத்தால் பல்வேறு நிலைகளில் வேறுபடுத்தி, மாறுபடுத்தி வாசித்து ஆச்சர்யத்தை ஏற்படுத்துவார். இது உடன் வாசிக்கும் தவில் கலைஞர்களுக்கே பிரமிப்பை ஏற்படுத்தும்.

திருவெண்காட்டில் ஆண்டு தோறும் நடைபெறும் இந்திர மகோற்சவத்தில் பத்து நாள் உற்சவத்திலும் இவர் தன் நாதத்தாலேயே உபாசனை செய்து வந்துள்ளார். கோவில் வாசிப்புதானே ஏதோ வந்ததை வாசிப்போம் என்ற மனோபாவம் கிஞ்சித்தும் இன்றி மனம் ஒன்றிய நிலையில் ஆத்மார்த்தமாக அவர் வாசிக்கும் வாசிப்பினைக் கேட்க விடிய விடிய உள்ளூர் மக்கள் மட்டுமின்றி வெளியூர்களில் இருந்தும் ரசிகர்கள் வருவார்களாம்.

சுப்ரமணியத்தை 'திருவெண்காட்டார்' என்றால் தான் இசையுலகம் அறியும். நெருக்கமானவர்கள் டி.பி.எஸ். (திருவெண்காடு பரமநாதன் சுப்ரமணியன்) என்று சுருக்கமாக அழைப்பார்கள்.

சுப்ரமணியத்தை 'திருவெண்காட்டார்' என்றால் தான் இசையுலகம் அறியும். நெருக்கமானவர்கள் டி.பி.எஸ். (திருவெண்காடு பரமநாதன் சுப்ரமணியன்) என்று சுருக்கமாக அழைப்பார்கள்.

டி.பி.எஸ். எல்லா பண்களையுமே சிறப்பாக கையாள்வார் என்ற போதிலும் பொது மக்கள் பலராலும் விரும்பிக் கேட்கப்பட்ட 'மக்கள் இசை' என்று சொல்லத்தக்கதும், 'மகுடி' என்று பாமர மக்களாலும் பேசப்பட்ட ராகம் 'புன்னாக வராளி' இந்தப் பண்ணை டி.பி.எஸ். கையாண்ட விதமே தனித் தன்மையோடு இருக்கும். இந்த ராகத்தை தனக்கே உரிய பாணியில் மிக மென்மையாக வாசித்து கிராமிய மணம் கமழச் செய்வார். பாம்பு பிடாரர்கள் தங்கள் மகுடியில் வாசிக்கும் கிராமிய இசைக்கும் தனது நாகஸ்வரம் மூலம் தெய்வீகத் தன்மையை ஏற்படுத்தித் தந்தவர் டி.பி.எஸ்.

டி.பி.எஸ். கச்சேரி என்றாலே அவரது 'மகுடி' (புன்னாகவராளி) வாசிப்பினை கேட்பதற்கென்றே ஒரு கூட்டம் காத்து இருக்கும். கேட்போரை மெய்சிலிர்க்கச் செய்யும் அந்த வாசிப்பின் அருமையை அதை கேட்டு உணர்ந்தவர்களால் கூட விவரிக்க முடியாது. புன்னாகவராளி மட்டுமின்றி இவரது ஸ்பெஷல் என்று சொல்லும்படியான வேறு பண்களாவன; சங்கராபரணம், கல்யாணி, மோகனம், தர்பார், தோடி, சிம்மேந்திர மத்திமம், சண்முகப்ரியா போன்றவைகளாகும்.

பெரிய கச்சேரியோ, சின்ன கச்சேரியோ அவருக்கு எல்லாமும் ஒன்றுதான். வாசிக்க நாகசுவரத்தை கையிலெடுத்த பின் அவர் தன்னிலை மறந்து இசையோடு ஒன்றிணைந்துவிடுவார். உடன் வாசிக்கும் கலைஞர்களையும் ஒன்றிணையச் செய்து விடுவார். இசையை டி.பி.எஸ். இறையனுபவமாகவே கையாண்டு இருக்கிறார்.

டி.பி.எஸ். அவர்களிடம் உங்களுக்குப் பிடித்த ராகம் எதுவென்று எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் 'சண்முகப்ரியா'. ஆனால் மக்களுக்கோ அவரது புன்னாகவராளி (மகுடி) வாசிப்புதான் முதல் தேர்வாக இருந்தது.

20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தலை சிறந்து விளங்கிய நாகசுர ராஜாக்களில் டி.பி.எஸ். எனப்பட்ட திருவெண்காடு சுப்ரமணியப் பிள்ளை குறிப்பிடத்தக்கவர்.

# 72 மேளகர்த்தாக்களின் வரலாறு!

**17**வது நூற்றாண்டில் வாழ்ந்த வேங்கடமகி என்பவர் 'சதுர்தண்டி பிரகாசிகை' என்னும் நூலில் 72 மேளகர்த்தாக்களின் அமைப்பை பற்றி எடுத்துரைக்கிறார். ஆனால், அவர் எல்லா மேளங்களுக்கும் பெயர் கொடுக்கவில்லை. மேலும் பல மேளகர்த்தாக்கள் கிரம சம்பூர்ண ஆரோகண அவரோகணமின்றிக் காணப்படுகின்றன. சில வர்ஜ இராகங்களும் மேளகர்த்தாக்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

18வது நூற்றாண்டில் தஞ்சையை ஆண்டு வந்த துளஜா பேரரசர் (1729 - 1735) "சங்கீத சாராம்ருதம்" என்ற தமது நூலில் வேங்கடமகியின் 72 மேள அமைப்பைக் குறிப்பிடுகிறார். ஆனால், அவரும் பெயர்கள் கொடுக்கவில்லை. இதே நூற்றாண்டில் கோவிந்தாச்சாரியார் என்பவர் 'சங்கிரக சூடாமணி' என்ற நூலில் கிரம சம்பூர்ண ஆரோகண - அவரோகண முறையுடன் கூடிய 72



துளஜா பேரரசர்



வேங்கடமகி



முத்துசாமி தீட்சிதர்

மேளங்களைக் குறிக்கும் 'கனகாங்கி - ரத்னாங்கி' பெயர் பட்டியலைக் கொடுத்துள்ளார். 'கடபயாதி' திட்டத்துக்கு ஏற்றவாறு ஒவ்வொரு மேளத்தின் எண்ணைக் குறிக்கும் வகையில் இப்பெயர்கள் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

இதைத் தவிர 'கனகாம்பரி', 'பேனத்யுதி' என்ற மற்றொரு பெயர் பட்டியலும் பின்னர் தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தப் பெயர்கள் 'கடபயாதி' திட்டத்திற்கு ஏற்றதாக உள்ளன. ஆனால், பல ஷாடவ சம்பூர்ண, ஔடவ சம்பூர்ண இராகங்கள் தொடர்ந்து மேளங்களாக குறிப்பிடப்பட்டு உள்ளன.


'கனகாங்கி, ரத்னாங்கி' மேளப் பெயர்களைத் தியாகராஜரும், அவருக்குப் பின் வந்த பல இசைவாணர் களும் பின்பற்றியுள்ளனர். 'கனகாம்பரி - பேனத்யுதி' மேளப் பெயர்களை முத்துச்சாமி தீட்சிதர் மட்டுமே பின்பற்றியுள்ளார்.

முன்னர் கூறப்பட்டது 'சம்பூர்ண மேளப்பந்ததி' என்றும் பின்னர் அழைக்கப்பட்டது அசம்பூர்ண மேளப் பந்ததி என்றும் சொல்லப்படுகிறது.


- பி.டி. செல்லத்துரை

"ஸங்கீத லஷியம் சாந்தமே" என்று மொழிந்த ஸ்ரீசரணர்கள் அப்படிப்பட்ட அந்த இசை எப்பேர்பட்ட அனுபவத்தைத் தரவல்லது என்று விளக்குகிறார்.

கல்வித் தெய்வமான சரஸ்வதி கையிலே வீணை வைத்திருப்பது எல்லோருக்கும் தெரியும். பரமேசுவரனின் பத்தினியான சாக்ஷாத் பராசக்தியும் கையிலே வீணை வைத்திருப்பதாகக் காளிதாஸர் 'நவரத்னமாலா' ஸ்தோத்திரத்தில் பாடுகிறார். அம்பாள் விரல் நுனியால் வீணையை மீட்டுக் கொண்டிருப்பதாகவும் 'ஸரிகமபதநி' என்ற ஸப்தஸ்வரங்களின் ஸாதுரியத்தில் திளைத்து ஆனந்திப்பதாகவும் பாடுகிறார்.



# மாமுனியின் மணிமொழிகள்!


பெரியவா

ஸரிகமபதநிரதாம் தாம்

வீணா ஸங்க்ராந்த காந்த ஹஸ்தாந்தம்.

இப்படியாக, ஸங்கீதத்தில் மூழ்கியுள்ள சிவகாந்தா (சிவனின் பத்தினி) சாந்தாவாகவும் (அமைதி மயமாகவும்) ம்ருதுள ஸ்வாந்தாவாகவும் (மென்மையான திருவுள்ளம் படைத்தவளாகவும்) இருக்கிறாள் என்கிறார் காளிதாஸர். அத்தகையவளை நான் நமஸ்கரிக்கிறேன் என்கிறார்.

சாந்தாம் ம்ருதுள ஸ்வாந்தாம்

குசபரதாந்தாம் நமாமி சிவகாந்தாம்

அவர் சுலோகத்தை கொண்டு போயிருக்கிற ரீதியைக் கவனித்தால், "அம்பிகை ஸங்கீதத்தில் அமிழ்ந்திருப்பதாலேயே அவள் சாந்த ஸ்வரூபிணியாக ஆகியிருக்கிறாள் என்றுத்

தோன்றுகிறது. அதே போல் ஸங்கீத அனுபவத்தினால்தான் அவளுடைய உள்ளம் மிருதுளமாக, புஷ்பத்தைப் போல் மென்மையாக, கருணாமயமாக ஆகியிருக்கிறது'' என்று தொனிக்கிறது.

சாக்ஷாத் பராசக்தியை இப்படி ஸங்கீத மூர்த்தியாகப் பாவிக்கும் போது அவளுக்கு சியாமளா என்று பெயர். ஸங்கீதத்தில் தோய்ந்து ஆனந்த மயமாகவும், சாந்த மயமாகவும், குழந்தை உள்ளத்தோடும் உள்ள சியாமளா தேவியைத் தியானித்தால், அவள் பக்தர்களுக்கு கருணை பொழிவாள். அவளது மிருதுவான இதயத்திலிருந்து கருணை பொங்கிக் கொண்டே இருக்கும். தெய்வீகமான ஸங்கீதம் ததும்பும் சந்நிதியில் சாந்தமும், ஆனந்தமுமாகவே பொங்கும். சிவகாந்தாவிடம் சரண் புகுந்தால் நமக்கும் இந்தச் சாந்தமும், ஆனந்தமும் கைகூடும்.

இந்த ஸ்லோகத்திலிருந்து ஸங்கீதமானது ஆனந்தம், சாந்தம், மிருதுவான உள்ளம், கருணை ஆகிய எல்லாவற்றையும் அளிக்கும் என்று தெரிகிறது.

''வேத அத்யயனம், யோகம், தியானம், பூஜை இவற்றைக் கஷ்டப்பட்டு அப்பியாசிப்பதால் கிடைக்கிற ஈசுவரானுபவத்தை தெய்வீகமான ஸங்கீதத்தின் மூலம், நல்ல ராக - தாள ஞானத்தின் மூலம் சுலபமாகவும், சௌக்கியமாகவும் பெற்று விடலாம்''. இப்படி தர்ம சாஸ்திரம் எனப்படும் ஸ்மிருதியைத் தந்திருக்கும் யாக்ஞவல்கிய மகரிஷியே சொல்லிஇருக்கிறார். வீணாகானத்தை அவர் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்.

'அப்ரயத்னேன' அதாவது கடுமையான ப்ரயாசை இல்லாமலே ஸங்கீதத்தால் மோக்ஷ மார்க்கத்தில் போய் விடலாம் என்கிறார். நம் மனசைத் தெய்வீகமான ஸங்கீதத்தில் ஊறவைத்து அதிலேயே கரைந்துபோகச் செய்தால் கஷ்டமில்லாமல் ஈஸ்வரனை அனுபவிக்கலாம். நாம் பாடி அனுபவிக்கும்போதே, இந்த ஸங்கீதத்தை கேட்கிறவர்களுக்கும் இதே அனுபவத்தை தந்துவிடலாம். வேறு எந்தவொரு சாதனையிலும் பிறத்தியாருக்கும் இப்படிச்



சமமான அனுபவ ஆனந்தம் தரமுடியாது. ஸங்கீதம் என்ற மார்க்கத்தின் மூலம் தங்கள் இதயங்களைப் பரமேஸ்வரனிடம் சமர்ப்பணம் செய்த தியாகராஜர் போன்ற பக்தர்கள், ஸங்கீதமே சாக்ஷாத்காரத்தைத் தரும் என்பதற்கு சாட்சியாக இருக்கிறார்கள்.

அம்பாள்தான் பிரம்மத்தின் சக்தி. நாதம் ஈஸ்வரன் அல்லது பிரம்மம். அம்பாள் ஸங்கீதத்தில் சொக்கி ஆனந்தமாக இருக்கிறாள் என்றால் பிரம்மமும், சக்தியும் வேறுவேறாக இல்லாமல் ஒன்றிய அத்வைத ஆனந்தத்தையே குறிக்கும்.

அம்பாள் தன் இயற்கையான கருணையைப் பொழிந்து, ஸங்கீதத்தின் மூலம் அவளை உபாசிப்பவர்களது ஆத்மா பரமாத்வாவிலேயே கரைந்திருக்குமாறு அருளுகிறாள்.

**காந்தர்வவேதம்:** அவன் என்ன புரட்டி விட்டானா? என்று சாதாரணமாக ஒரு பேச்சு வழக்கு இருக்கிறது. புரட்டுவதற்கு என்ன இவ்வளவு முக்கியத்துவம்? யோசித்துப் பார்த்தால் முறைப்படி புரட்டுவது ரொம்பவும் பெரிய, அர்த்தமுள்ள விஷயம் என்று தெரிகிறது. அநேக கலைகள் புரட்டுவதினாலே தான் பிறந்திருக்கின்றன.




இத்தனை புஸ்தகங்கள் நம்மிடம் இருக்கின்றன. ஒரு சில எழுத்துக்களைப் புரட்டி புரட்டி வைத்து வார்த்தைகளாக்கியதால் தானே இத்தனை புஸ்தகங்களும் வந்திருக் கின்றன! நம்மைவிட இங்கிலீஷ்காரர்களுக்கு இன்னும் எழுத்து குறைவு. இருபத்தாறே எழுத்தைப் புரட்டி வைத்து ஏராளமாக எழுதிவிட்டார்கள். அந்த புரட்டலில் ஒரு முறையோ, நேர்த்தியோ, அழகோ இருந்து விட்டால் அது கலையாகிவிடுகிறது.

நமக்குத் தெரிந்த அதே வார்த்தைகளைத் தான் ஒரு கவிஞனும் புரட்டி வைக்கிறான். அவனது புரட்டலில் ஒரு கற்பனையும், ரச உணர்வும் இருப்பதானால் அது கவிதையாகிறது. அப்படி புரட்டுபவனை கவிஞனாகக் கொண்டாடுகிறார்கள். நாம் வார்த்தையைப் புரட்டி எழுதினால் அதை யார் மதிக்கிறார்கள்? தாகூர் மாதிரி ஒருவர் புரட்டுகிறபடி புரட்டினால் ஏக மதிப்பு உண்டாகிறது. அக்ஷரலக்ஷம் என்கிறார்கள்.

சித்திரக் கலையும் இப்படியே தான். வர்ண பாட்டிலையும், பிரஷ்ஷையும் வைத்துக் கொண்டு நாம் புரட்டுவது ரஞ்சகமாக இல்லை. ஆனால் சைத்திரிகன் அதே வர்ணங்களைப் புரட்டுகிறபடி புரட்டினால் அது ஆனந்தம் தருகிறது.

ஸங்கீதமும் ஒரு வகையில் புரட்டல்தான். நாம் எல்லோரும் சத்தம் போடுகிறோம். அந்த சப்தத்தை ஸ்வரங்களாகப் பாகுபடுத்தி, இதற்கப்புறம் இது என்று அழகாகப் புரட்டிவைத்தால் இன்பம் உண்டாகிறது. நன்றாகப் புரட்டினால் நிறைய இன்பம். புரட்டலில் நிபுணனாக இருப்பவனுக்கு ஒரு மணிக்கு இருநூறு முந்நூறு தருகிறோம். அதுவே நாம் சப்தம் செய்தால் ஓய வைப்பதற்கு வேண்டுமானால் பணம் கொடுக்கலாம். புரட்டல் இன்பம் இப்படிப்பட்டது.

நமது தொண்டை என்கிற மாமிச வாத்தியங்களில் காற்றைப் புரட்டுகிறோம். தவிர ஸங்கீத வாத்யங்கள் பல இருக்கின்றன. எல்லாவற்றிற்குமே இந்த புரட்டல் மாத்திரம் பொதுவானது. தவில், மிருதங்கம், கஞ்சிரா போன்ற சரும வாத்தியங்களில் தோலில் புரட்டுகிறார்கள். வீணை, தம்பூர், பிடில் போன்ற வாத்தியங்களில் தந்திகளில் புரட்டுகிறார்கள். இந்த வாத்தியங்களில் புரட்டல்களுக்கு நடுவே இழைந்து வரும் ‘அநுரணணம்’ என்ற இழைப்பு ஒலி

நயமான இன்பம் தருகிறது. ஒரு தரம் மீட்டினால் உண்டாகும் ஒலி இழுத்துக் கொண்டே நிற்கிறது. முதல் மீட்டில் உண்டான ஒலி நீடித்து, இரண்டாவது மீட்டில் எழுப்பும் ஒலியோடு கவ்வி நிற்கிறது. இதுவே ‘அநுரணணம்’.

புல்லாங்குழல், நாயனம் போன்ற துவாரமுள்ள ‘ரந்திர’ வாத்யங்களில் காற்றைப் புரட்டுகிறார்கள். ஹார்மோனியமும் ஒருவிதத்தில் ரந்திர வாத்யம் தான். அதில் வாய்க்குப் பதில் துருத்தி இருக்கிறது. புல்லாங்குழலிலும், நாயனத்திலும் துவாரங்களை விரலால் மாற்றி மாற்றி அடைத்துத் திறக்கிறார்கள். என்றால் ஹார்மோனியத்தில் பில்லைகளை மாற்றி மாற்றி அழுத்தி எடுக்கிறார்கள். தத்துவம் ஒன்றுதான்.



சப்தத்தை புரட்டுவதோடு, அங்கங்களைப் புரட்டிவிட்டால் ‘நாட்டியக் கலை’ உண்டாகிறது. ஸங்கீதத்தில் காதால் கேட்டு அர்த்த ஆனந்தமும், ஸ்வர ஆனந்தமும் பெறுகிறோம். நாட்டியத்தில் இவற்றோடு கண்களால் பார்த்து ‘அங்கசர்ய’ ஆனந்தமும் (அங்கங்களை முறைப்படி அசைப்பதால், புரட்டுவதால் ஏற்படுகிற இன்பமும்) பெறுகிறோம்.



நவரஸ உணர்ச்சிகளை விளக்குகிற அங்க அசைவான அபிநயம் மட்டும் இல்லாமல் நவரஸமில்லாத வெறும் அங்கசரியை (அங்கப் புரட்டு) மட்டுமே ஆனந்தம் தருவது உண்டு என்பதால் தான் ‘நிருத்தம்’ என்ற கலை ஏற்பட்டு இருக்கிறது. ஈசுவரனுக்குச் செய்கிற அறுபத்து நாலு உபசாரங்களில் ஸங்கீதத்தோடு கூட நிருத்தமும் உபகாரமாகச் சொல்லப்படுகிறது. கீர்த்தனத்தில் சப்தம், அர்த்தம், லயம் யாவும் சேர்ந்து இன்பம் தருகின்றன. ஸ்வரம் பாடும் போது சப்தமும், லயமும் மட்டும் இன்பம் தருகின்றன. ராக ஆலாபனத்தில் வெறும் சத்தம் மட்டுமே ஆனந்தம் தருகிறது அல்லவா? நிருத்தத்தில் வெறும் அங்கசரியை மட்டும் லயத்தோடு சேர்ந்து ஆனந்தம் தருகிறது.

இந்தக் கலைகள் யாவும் ‘காந்தர்வ வேதம்’ எனப்படும். கந்தர்வர்கள் உற்சாகப் பிறவிகள். அவர்கள் எப்பொழுதும் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் இருப்பார்கள். மனதுக்கு உற்சாகம் தரும் கலைகளுக்கு இதனாலேயே ‘காந்தர்வ வேதம்’ எனப் பெயர் ஏற்பட்டு இருக்கிறது.

●

# யாமார்க்கும் குடியல்லோம்...

**ந**மது பாரம்பரிய நாட்டியக் கலையை செம்மைப்படுத்தித் தந்தவர்களில் தஞ்சை நால்வருக்கு முக்கியப் பங்கு உண்டு என்பது மறுப்பதற்கில்லை. இருப்பினும் திறமையின் அடிப்படையில் பார்த்தால் முதல் மூவர்களைவிட நான்காமவரான வடிவேலுவே முன் நின்றார். இவர் மித மிஞ்சிய தன்மான உணர்வு கொண்டவர்.

தஞ்சைப் பெரிய கோவிலில் இவர்களுக்கு வழக்கமாகத் தரப்பட்டு வந்த முதல் மரியாதை ஒரு சிலரது சூழ்ச்சியால், மன்னருக்குத் தரப்பட்ட தவறான தகவல்களின் அடிப்படையில் தவிர்க்கப்பட அதற்காக தஞ்சை மன்னரையே எதிர்த்தவர்தான் வடிவேலு. இக்காரணத்தால் இந் நால்வருமே அரச உத்தரவின்படி தஞ்சை சமஸ்தானத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். சூழ்ச்சிக்காரர்கள் தங்கள் நோக்கத்தில் வெற்றி பெற்றனர்.

இந் நால்வருக்கும் புகலிடம் தந்து ஆதரித்தவர் திருவிதாங்கூர் மன்னரான ஸ்வாதித் திருநாள். வடிவேலுவின் சிறப்பான பணிகளால் திருவிதாங்கூர் சமஸ்தானம் கலைகளின் மையமாக மிளிர்ந்தது. அதே சமயம், தஞ்சை தனக்கிருந்த பெருமைகளை மெல்ல மெல்ல இழக்க ஆரம்பித்தது. தான் தவறு செய்து விட்டோம் என்பதனை உணர்ந்த தஞ்சை மன்னர் கௌரவம் பார்க்காமல் நால்வரையும் தஞ்சைக்கே மீண்டும் திரும்பும்படி தூதுவர்கள் மூலம் அழைப்பு விடுத்தார். இவ் அழைப்பினை



ஸ்வாதித் திருநாள் மகாராஜா



ஏற்று முதல் மூவர்களும் தஞ்சை திரும்பினர்.

ஆனால், சுயமரியாதை உணர்வு அதிகமுள்ள வடிவேலு மட்டும் அங்ஙனம் செல்ல விரும்பவில்லை. தஞ்சை மன்னரின் ஆசை வார்த்தைகளுக்கு அடி பணிய மறுத்தார். இதற்காக, அவரின் விசுவாசத்தைப் பாராட்டி திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அரசவைக் கலைஞராக அங்கீகாரம் செய்யப்பட்டார்.


தஞ்சை சமஸ்தானம் வடிவேலுவை இழந்தது அந்த சமஸ்தானத்திற்கு மட்டுமல்ல, நமது கலைகளின் வளர்ச்சிக்கும் - மேம்பாட்டிற்கும் விழுந்த முட்டுக்கட்டை என்பது நிஜம். திருவிதாங்கூரில் வடிவேலு செய்த சங்கீத மேம்பாட்டு நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் தஞ்சை திரும்பிய ஏனைய மூவரும் சாதித்தது ஒன்றுமில்லை.

வடிவேலு முன் கோபம் உடையவர் என்றபோதிலும் நியாய உணர்வு மிக்கவர் என்பதற்கு ஒரு சான்று.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அரசவைக் கலைஞராக இருந்தபோது ஒரு சமயம் மகாராஜா ஸ்வாதித் திருநாளின் புகழ்பாடும் ஒரு பதவர்ணத்தை இயற்றி அரண்மனை நாட்டிய நிகழ்ச்சிகளில் அதனைக் கலந்து அரங்கேற்றினார். மன்னர் மகிழ்ச்சி கொள்வார் என்று வடிவேலு எதிர்பார்த்த வேளையில் "இனி இப்பதவர்ணம் எந்த மேடையிலும் பாடப்படக் கூடாது" என்றார் மன்னர் கோபக் குரலில்.

இதனை சற்றும் எதிர்பாராத வடிவேலு, "ஏன் எனது வர்ணத்தில் பிழையேதும் உள்ளதா?" என்று பதட்டப்பட்டார். மன்னர் ஸ்வாதித் திருநாளும் சங்கீத நுணுக்கங்களை நன்கு உணர்ந்தவர் என்பதால் "வடிவேலுவின் வர்ணத்தில் பிழையா? அப்படி எவரால் சொல்லிவிட முடியும்? அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. இறைவனின் புகழைப் பாட உள்ள சங்கீதத்தில் மனிதப் புகழ் பாடுவது இசைக் குற்றமல்லவா?" என்றார் மன்னர்.

"மக்களுக்கு கண்ணில்படும் தெய்வம் மன்னர்தானே" என விளக்கம் சொல்ல முற்பட்டார் வடிவேலு. "மன்னரே என்றாலும் அவனும் மனிதான் தானே" என்று தம் கருத்தில் உறுதியாக இருந்தார் மன்னர். அதற்குப் பின் அப்பதவர்ணம் வடிவேலுவால் வாபஸ் பெறப்பட்டது.


தஞ்சை நால்வர்

வடிவேலு

இச்சம்பவம் ஒரு கருத்தில், செயலில் நியாயம் இருப்பது உண்மையாயின் அது தனக்குத் தவறாகப்படாவிடினும் அதற்கு வடிவேலு கட்டுப்பட்டார் என்பதற்கு உதாரணமாக அமைகிறது. தஞ்சை பெரிய கோவிலில் தங்களுக்கு நடத்தப்பட்ட அவமரியாதை நியாயத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்த காரணத்தினால்தான் அவர் வெகுண்டெழுந்து மன்னரையே எதிர் கேள்வி கேட்டிருக்க வேண்டும். அதனாலேதான் தஞ்சை மன்னரும் தனது தவறை உணர்ந்து இவர்களை மீண்டும் அழைத்தும் இருக்கிறார்.

வடிவேலுவின் இழப்பு வரலாற்றுக் குற்றமே என்பது நிஜம். கூட்டிக் கழித்துப் பார்த்தால் இழப்பென்பது வடிவேலுவிற்கு அல்ல; தஞ்சை சமஸ்தானத்திற்கும் - நமது கலைகளுக்கும் தான்.

- டி.எஸ்.டி.ராயன்

# என்ன பாவம் செய்தேன்?

**த**மது என்பது வயது வரையில் வெண்கலக் குரல் கணீரென ஒலிக்கக் கச்சேரிகள் செய்து ரசிகர்களை மகிழ்வித்து வந்தவர் சங்கீத சாம்ராட் - சங்கீத கலாநிதி - காயன கந்தர்வர் பிரம்மஸ்ரீ செம்பை வைத்யநாத பாகவதர் அவர்கள்.

இசை உலகத்தவரால் ‘செம்பை’ என்று மரியாதையுடன் விளிக்கப்பட்ட அம் மேதை பிறந்தது கேரள மாநிலத்தில் எங்கோ ஒரு மூலையில் உள்ள ஒரு சிறு கிராமம்.

நீண்ட காலமாய் அதே மாறா இளமையுடன் இவரால் மட்டும் எப்படி பாட முடிகிறது? என்கிற தனது நெடு நாளைய சந்தேகத்தை டி.எஸ்.பாலகிருஷ்ண சாஸ்திரிகள் ஒரு நாள் செம்பையிடமே கேட்டு விட்டார்.

“நான் என்ன பாடறது? எல்லாம் அந்த குருவாயூரப்பன் தன்னுடைய கைங்கர்யத்தை என் மூலம் நடத்தி வருகிறான்.” என்று சாதாரணமாக சொன்னாராம். இது வெறும் தன்னடக்க வார்த்தை அல்ல. அதற்கான அடிப்படை காரணத்தைக் கொண்ட தனி கதை ஒன்று உண்டு.

*1951*-ஆம் ஆண்டு மியூசிக் அகாடமியினர் தங்களுடைய இசை விழாவிற்கு செம்பையை தலைமை தாங்க ஏற்பாடு செய்து இருந்தனர். ஏறக்குறைய இரண்டு வார காலம் நடந்த இவ்விழாவின் இறுதி நாளன்று இவருக்கு ‘சங்கீத கலாநிதி’ விருது வழங்கப்பட்டது.

இவ்விழா தொடர்பான தொடர் பணிகளால் அவரின் உடல் நலம் பாதிப்படைந்ததோடு, குரலும் வெகுவாக சீர்குலைந்தது. இருப்பினும், சுசீந்திரத்தில் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்த ஒரு கச்சேரியில் பாடப் போனார். இரண்டுமணி நேரம் கூடப் பாடி



"நான் என்ன பாவம் செய்தேன்?" இப்படிச் செய்துவிட்டாயே! நான் பாடும் ஸ்தோத்திரங்களைக் கூட உனக்குக்கேட்கப் பிடிக்கவில்லையோ? என கண்ணீர் மல்கக் கேட்டார்.



செம்பை

இருக்க மாட்டார். அதற்கே அவர் படாதபாடுபட வேண்டியதாயிற்று. மேற்கொண்டு செம்பையால் பாடமுடியாது போகவே கச்சேரி பாதியிலேயே முடிவுற்றதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டது.

இதற்குப் பின் மூன்று நான்கு வருடங்கள் அவர் எந்தக் கச்சேரி மேடையிலும் ஏறவில்லை. என்னென்னவோ வைத்தியங்கள் எல்லாம் செய்து பார்த்தார். எந்தவொன்றாலும் பழுதடைந்த அவரது குரல் வளத்தை சீர்படுத்த முடியவில்லை. திருத்தலங்கள் தோறும் ஷேத்ராடனம் புறப்பட்டார். கடைசியில், தன் இஷ்ட தெய்வமான குருவாயூரப்பனிடமே ஒரு கௌசிக ஏகாதசியன்று சென்று முறையிட்டார்.

"நான் என்ன பாவம் செய்தேன்?" இப்படிச் செய்துவிட்டாயே! நான் பாடும் ஸ்தோத்திரங்களைக் கூட உனக்குக்கேட்கப் பிடிக்கவில்லையோ? என கண்ணீர் மல்கக் கேட்டார்.

செம்பையின் மன்றாடலை அருகே இருந்து கேட்ட வைத்திய மடம் நம்பூதிரி என்பவர் "என்னுடன் வாருங்கள் ஒரு நாட்டு வைத்தியரிடம் அழைத்துப் போகிறேன். உங்கள் குறை தீரும்" என்று சொல்லி செம்பையை அழைத்தார். ஏற்கனவே பல வைத்தியங்களைப் பார்த்து நம்பிக்கை இழந்து இருந்த செம்பை நம்பூதிரியின் அழைப்பினை அந்த குருவாயூரப்பன் அழைப்பாகவே கருதினார். எனவே, குருவாயூரப்பனை நோக்கி "என் அப்பனே இம்முறை என் குரல் சீரடைந்து பழைய நிலைக்குத் திரும்பி மறுபடியும் முன் போல் பாட முடிந்தால் இனி பாட்டு மூலம் நான் சம்பாதிப்பது எல்லாம் உனக்கே அர்ப்பணிக்கிறேன்" என்று சங்கல்பம் எடுத்துக் கொண்டார்.

நாட்டு வைத்தியம் ஒரு வார காலம் தொடர்ந்தது. செம்பையின் வேண்டுதல்படி அவரது பழைய குரல் வளம் அவருக்கு மீண்டது. அதற்குப் பின் செம்பை அமரர் ஆகும் வரை அவர் செய்த அனைத்துக் கச்சேரிகளிலும் கிடைக்கும் சன்மானத்தில் போக்குவரத்து செலவு போக மீதமுள்ள தொகையை அப்படியே குருவாயூர் தேவஸ்தானத்திடம் செலுத்திவந்தார்.

அத்தொகையினை தேவஸ்தான நிர்வாகமானது 'உதயாஸ்தமன' பூஜைக்கான செலவிற்காக பயன்படுத்திக் கொண்டது.

**– எஸ்.நிர்மலா தேவி**



**க**ர்நாடக இசை உலகின் முன்னணிக் கலைஞர்களுள் ஒருவராகத் திகழ்பவர் **வசுதாரவி.** கர்நாடக மாநிலம் மைசூரைச் சேர்ந்த மூத்த இசைக் கலைஞரும், இசையில் முனைவர் பட்டம் பெற்றவரும், சென்னை சங்கீத வித்வத் சபையில் முக்கிய அங்கம் வகிப்பவருமான திருமதி மஞ்சுளா ஸ்ரீராம் அவர்களிடம் இசை பயின்றார். பின்னர் மறைந்த மூத்த இசைக் கலைஞர் ஏ.சுந்தரேசன் அவர்களிட மிருந்தும் இசையின் நுணுக்கங்களை கற்றார். பல்வேறு இசை நாட்டிய நிகழ்ச் சிகளில் பங்கேற்று சிறப்பித்துள்ளார்.



# சங்கீதமேடை முதல் திரையிசை வரை

## - வசுதாரவி



காலஞ்சென்ற குரு காரைக்குடி மணி அவர்களின் ஸ்ருதி லய கேந்திரா மிருதங்க ஷைலேஸ்வரி கோயிலில் 2022 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்திருந்த நந்திகேஸ்வர உற்சவத்தில் பங்கெடுத்துக் கொண்டு சிறப்பித்தார்.

இசைஞானி இளையராஜா, இசைக் கலைஞர் ராஜ்குமார் பாரதி, நடன மணிகள் மாளவிகா சருக்கை, அலர்மேல் வள்ளி, ப்ரியதர்சினி கோவிந்த் போன்ற மேதைகளுடன் இணைந்து பல நிகழ்வுகளில் பங்கேற்று சிறப்பித்துள்ளார்.

2005 முதல் 2007வரை YACMன்










செயலாளராகப் பணி புரிந்துள்ளார். ஜூன் 2020 முதல் Global Carnatic Musicians Association ல் முக்கிய அங்கத்தினராக இருந்து வருகிறார். அது மட்டுமா.....

பொன்னியின் செல்வன் பாகம் இரண்டில் ஏ.ஆர்.ரகுமான் இசையில் பின்னணியும் பாடியுள்ளார். பல்வேறு மேலைநாட்டு இசை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று சிறப்பித்துள்ளார்.






சென்னை ஆல் இந்தியா ரேடியோவின் “ஏ” கிரேட் கலைஞரான இவர் இசைத் தென்றல், கான கலா சரஸ்வதி, பாரத் கலாச்சார் வழங்கும் யுவகலாபாரதி (2008), ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலட்சுமி விருது, ஸ்ரீமதி டி.கே.பட்டம்மாள் விருது, எம்.எல்.வி. விருது, மும்பை சண்முகாநந்தா சபையின் ‘பாரத ரத்னா எம். எஸ். சுப்புலட்சுமி ஃபெல்லோஷிப்’, ஷண்முக சங்கீத சிரோன்மணி, சத்திய கான கோகிலசுந்தரம், ஆசார்ய சூடாமணி ஏ.சுந்தரேசன் விருது உள்ளிட்ட பல விருதுகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளார்.



மஹா ஸ்வாமி சங்கீதாஞ்சலி, அன்னமாச் சாரியார் கிருதிகள், கிருஷ்ண லீலா தரங்கிணி, பத்ராசல ராமதாஸ் பாடல்கள், மும்மூர்த்திகள் கிருதிகள், சதாசிவ பிரம்மேந்திரர் சாகித்தியங்கள், பாபநாசம் சிவன் கீர்த்தனைகள், புரந்தரதாசர் தேவர் நாமாக்கள் என்று இவரது இசைப் பயணம் வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது

**– சங்கர் வெங்கட்ராமன்**

# அப்படிப்போடு!...


**செ**ன்னைக்கு அருகே திரிசூலம் என்ற பகுதி விமான நிலையத்திற்கு எதிர்புறம் உள்ளது. அங்குள்ள கற்பாறைகளில் கல்லுடைக்கும் பணியில் ஈடுபடும் தென்மாவட்ட தொழிலாளர்கள் நிரம்பிய ஊர் இது. இங்குள்ள சிவன் கோவில் பிரசித்தமானது.

சங்கீதப் பிரியரான இக்கோவிலின் பக்தர்களில் ஒருவர் ஒரு சிவராத்திரி அன்று கர்நாடக இசைக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்து இருந்தார்.

நிகழ்ச்சி நாளன்று, தொழிலாளர்கள் வழக்கம் போல் மாலை நேரத்தில் 'உற்சாகப் பானம்' அருந்திவிட்டு ஊருக்குள் புதிதாக பாட்டுச் சத்தத்தையும், விளக்கு வெளிச்சத்தையும் பார்த்ததும் பொழுது போக்க கூட்டம் கூட்டமாக மேடைக்கு முன் வந்து அமர்ந்து விட்டனர்.

கச்சேரி தந்த வித்வானுக்கு ஏக குஷியாகிவிட்டது. காரணம், அது நாள் வரை அவரின் கச்சேரிக்கு இந்தளவு கூட்டம் கூடியது கிடையாது. தற்காலிக ரசிகர்களாகிய தொழிலாளர்கள் 'உற்சாகப்பானம்' தந்த உந்துதலில் காதில் விழுந்த வாத்ய ஒலிகளுக்கு ஏற்ப தலை, கை, கால்களை ஆட்டி வெகுவாக ரசித்தனர்.

தனி ஆவர்த்தன நேரம் வந்தது. பக்க வாத்யக்காரர்கள் ஒருவருக்கொருவர் முக சேஷ்டைகளோடு செய்த வாங்கி



திரிசூலம் கோவில்

வாசிக்கும் போட்டியை நிஜமெனக் கருதி சீரியஸான கட்டமாக நினைத்து 'சபாஷ்' 'அப்படிப்போடு' 'வுடாத புடி' என்றெல்லாம் குரல் கொடுத்து உற்சாகப்'படுத்தினர்.'



கச்சேரி முடிந்ததும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவரிடம் பாடகர் "என்னவொரு அருமையான ரசிகர்கள். பாமரர்களுக்கும் சங்கீத ஞானம் இருக்கத்தான் செய்கிறது. அங்கே இங்கே நகராமல் அத்தனை பேரும் சொக்கிப் போய் அல்லவா ரசித்தார்கள்" என்று பலவாறாக புகழ்ந்து தள்ளிவிட்டார். மேற்படி 'சொக்கலுக்குக்' காரணம் தனது சங்கீதம்தான் என்கிற அபிப்பிராயம் அவருக்கு.

வித்வான்களை வழி அனுப்ப உடன் வந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளரை நோக்கி 'ஐயரே இங்கே வா' என உரிமையாக ஒரு பெரிசின் குரல் அழைத்தது. அவரருகே சென்ற நிகழ்ச்சி ஏற்பாட்டாளரிடம் "ஆமா கச்சேரி கடைசிலே டோலக்கு (மிருதங்கம்) வாசிச்சவனுக்கும், தப்பு தட்டுனவனுக்கும் (கஞ்சிரா) ஒய் ஒய்னு இழுத்தானே (வயலின்) இவனுங்களுக்கு எல்லாம் சண்டை வுட்டீங்களே (தனி ஆவர்த்தனம்) அதுல எவன் கெலிச்சான்னு (ஜெயித்தது) கடைசி வரைக்கும் சொல்லாமலேயே வுட்டுபுட்டீயே ஐயரே" என்று வருத்தப்பட்டதாம் அந்த பெரிசு. மற்றதுகள் அதனை ஆமோதித்ததாம்.

பெரிசின் இந்த சந்தேகம் வித்வானின் காதில் விழுந்தால் இதுகாறும் அவர் பெற்ற மகிழ்ச்சியை பாழ்படுத்திவிடும் என பயந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் "இவாளை எல்லாம் அனுப்பி வச்சுட்டு வந்து சொல்றேன்" என்று சமாதனப் படுத்திவிட்டு நைசாக நழுவி இருக்கிறார்.

இந்த உரையாடலை வித்வான் கவனித்த போதும் அதன் சாரம்சம் மட்டும் அவருக்கு காதில் விழாததால் நிகழ்ச்சி ஏற்பாட்டாளரிடம் விவரம் கேட்டுள்ளார். "கச்சேரி ரொம்ப அற்புதமா இருந்துச்சுன்னு பாராட்டுறாங்க" என்று சொல்லியபடியே வேறு 'ஏழரை' ஏதும் அருகே வருவதற்குள் வாத்யக் கோஷ்டியை வேகம் வேகமாக காருக்குள் திணிக்காத குறையாக அனுப்பிவிட்டு பெருமூச்சு விட்டு இருக்கிறார்.

இப்போதெல்லாம் அந்த பக்தர் திரிசூலம் போனோமா... சாமி கும்பிட்டோமா என்பதோடு 'சிவனே' என திரும்பி வருவதோடு சரி... வேறு விஷப் பரீட்சைகளில் எல்லாம் இறங்குவதில்லையாம்.

– திரிசூலத்தான்

# திரையில் டி.என்.ஆர்.


டி.என்.ராஜரத்தினம் பிள்ளை

**தி**ருவாவடுதுறையைப் பூர்வீகமாகக் கொண்ட ராஜரத்தினம் பிள்ளை, குப்புசாமிப் பிள்ளையின் மகனாகப் பிறந்தார். தன் தாய்மாமன் திருமருகல் நடேசப் பிள்ளையிடமும், திருவாவடுதுறை மார்க்கண்டம் பிள்ளையிடமும் நாதஸ்வரம் பயின்றார். இசை மேதை, பிரபல வயலின் வித்வான் திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யரிடம் வாய்ப்பாட்டு கற்றார்.

அநாயாசமான வாசிப்பு, லயிக்கவைக்கும் லயம், தாளம் தப்பாத ஸ்ருதி, சுத்தமான சங்கீதம், அதீதமான ஞானம், அலைமோதும் பிருகாக்கள், கோர்வையான கார்வைகள். எந்த ராகத்தை எடுத்துக் கொண்டாலும் அதனை ஜொலிக்கச் செய்யும் அபரிமிதமான கற்பனைத் திறன் இவை அனைத்தும் ராஜரத்தினம் பிள்ளை என்கிற டி.என்.ஆரிடம் குடி கொண்டிருந்த சிறப்பம்சங்கள்.

'நாதஸ்வர சக்ரவர்த்தி' என அனைவராலும் போற்றப்பட்ட ஸ்ரீமான் டி.என்.ராஜரத்தினம் பிள்ளை ஒரு 'தோடி ஸ்பெஷலிஸ்ட்'.


பல வருடங்களுக்கு முன்... சென்னை மயிலாப்பூரில் பிரபல வக்கீல் கே.வி.கிருஷ்ணஸ்வாமி ஐயரது புதல்வியின் திருமணம்.




இரவு கல்யாண ஊர்வலம். அதில் ராஜரத்தினம் பிள்ளையின் கச்சேரி. நான்கு மாட வீதிகளைச் சுற்றி விடியற்காலையில் கல்யாண ஊர்வலம் நிறைவடைந்தது. ஆனால், ஊர்வலத்தின் ஆரம்பத்தில் தொடங்கிய ராஜரத்தினத்தின் 'தோடி' மட்டும் முடிந்தபாடில்லை. கலைவாணி தன் அருள் முழுவதையும் இந்த ஒரு மனிதனிடத்தில் கொட்டிக் கொடுத்திருப்பாள் போலும்.

தோடி மட்டுமல்ல, கல்யாணி, கரகரப்ரியா, தர்பார், காம்போதி, சங்கராபரணம், காபி போன்ற ராகங்களை மிக நேர்த்தியுடன் கையாள்வார். மிருதங்கம், தம்புரா சுருதியுடன் கச்சேரி மேடைகளில் நாதஸ்வரம் வாசித்துப் புதுமையும், புரட்சியும் செய்தார். தனது கலையில் தனக்குள்ள திறமை மீது அவருக்கு இருந்த அழுத்தமான நம்பிக்கைதான் அவரை அக்கலையில் அசாத்தியமானவராக மிளிரச் செய்திருக்க வேண்டும்.


**1952**–ம் ஆண்டு, இசைத்துறையில் சாதனை புரிந்தமைக்காக இவருக்கு ஜனாதிபதி விருது தரப்பட்டது.



எம்.கே.தியாகராஜ பாகவதர்



திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர்



எல்லீஸ் ஆர்.டங்கன்

**1940**–ஆம் ஆண்டு மதுரை ஸ்ரீ தண்டபாணி பிலிம்ஸ் லிட்., தயாரிப்பில் எல்லீஸ் ஆர்.டங்கன் டைரக்ஷனில் வெளிவந்த 'காளமேகம்' எனும் திரைப்படம். கவி காளமேகத்தின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் விதமாக அமைந்த இப்படத்தில் காளமேகமாகத் தோன்றி பாடி, நடித்தவர் டி.என்.ராஜரத்தினம் பிள்ளை. (பின்னாட்களில் 'கவிராஜ காளமேகம்' எனும் படத்தில் டி.எம்.சௌந்தரராஜன் காளமேகமாகத் தோன்றினர். இசை எஸ்.எம். சுப்பையா நாயுடு)

'புரட்சிக் குயில்' புதுச்சேரி புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடல்களைப் புனைய S.P.L. தனலட்சுமி, என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் போன்றோருடன் ராஜரத்தினம் பிள்ளை நடித்திருந்தார். தன் சொந்தக் குரலில் பல பாடல்களை இப்படத்தில் பாடியுமிருந்தார்.

கரகரப்பிரியாவில் விருத்தமாக "தாள் சடையும் நீள் முடியும் ஒண்மழுவும் சக்கரமும்" என்ற பாடலையும், தோடியில் "நாணுகின்றேன் என்று தன் முகங்காட்டும் நங்கையைப் போல" என்றொரு பாடலும் மற்றும் சங்கராபரணம், சிம்மேந்திர மத்திமம், கானடா, காம்போதி, புன்னாக வராளி, பிலஹரி ராகங்களில் ராகமாலிகையாக மிக நீண்டதொரு விருத்தமாக "சீருள்ள வெண்குடை" என்ற பாடலையும் பாடி இருந்தார்.

எம்.கே.தியாகராஜ பாகவதர், ராஜரத்தினம் பிள்ளையின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவர். ஒரு சமயம் தன் நாதஸ்வரத்தில் பைரவி ராகத்தில் சிறிது ஆலாபனை செய்துவிட்டு "இதே போல் உங்களால் பிருகாக்கள் கொடுத்து பாட முடியுமா?" என்று கேட்க, அதையே தியாகராஜ பாகவதர் சவாலாக ஏற்று பைரவி ராகத்தில் ராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வர effect-ஐ தன் குரலில் அதே பிருகாக்களுடன் பாடினார். அப்படி உருவானதுதான் 'திரு நீலகண்டர்' படத்தில் இடம் பெற்ற 'பவளமால்' என்ற ராகமாலிகைப் பாடல். (பைரவி, கல்யாணி மற்றும் மணிரங்கு ராகங்களில்) அதே 'திரு நீலகண்டர்' படத்தில் சிதம்பரத்தில் நடராஜப் பெருமாள் எழுந்தருளி பிரகாரத்தில் வலம் வரும் காட்சியில் ஸ்வாமிக்கு முன்னால் நாதஸ்வரம் வாசித்தபடி ஒரு சில நிமிடங்கள் நீடித்த அக்காட்சியில் ராஜரத்தினம் பிள்ளை தோன்றினார்.

எம்.கே.தியாகராஜ பாகதவர், P.பானுமதி நடித்த 'ராஜமுக்தி' படத்தில் ஒரு சிறப்புத் தோற்றத்தில் ராஜ சபையில் நடக்கும் இசைக் கச்சேரி காட்சியில் ஒரு முழுப் பாடலையும் வாசித்து எண்ணற்ற நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டவர் டி.என்.ஆர்.

திரைப்படத்தில் தோன்றிய முதல் நாதஸ்வர வித்வான் என்ற பெருமை ஸ்ரீமான் டி.என்.ராஜரத்தினம் பிள்ளை அவர்களையே சாரும்.

– சிம்மம் குமார்

# ஒழுங்குப்படுத்தப்பட்ட ஓசையே இசையாகும்!

**உ**லகத்தில் உள்ள எந்தவொரு பொருளும் மற்றொரு பொருளோடு தொடர்பு உடையது. நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐம்பெரும் பூதங்கள் அனைத்தையும் அனுபவத்திற்கு ஏற்றார்போல் உணரலாம். இவ்வாறே மனிதனது வாழ்க்கையும் இசையுடன் இரண்டறக் கலந்தே உள்ளது.

இசை என்பதற்கு இசைய வைத்தல், மனத்தை வயப்படுத்தல் என்றெல்லாம் பொருள் உண்டு. மனித வாழ்க்கையில் இன்ப - துன்பங்கள், நன்மை - தீமைகள், பாவ - புண்ணியங்கள், அன்பு - கோபம் ஆகியன மாறிமாறி வருகின்றன. இவையாவும் அவரவர் செயற்பாடுகளுக்கு ஏற்ப செயற்கையாய் வருகின்றன. அதுவே இரவு - பகல், வெயில் - மழை போன்றவை இயற்கையின் வெளிப்பாடு.

பஞ்ச பூதங்களில் காற்று மனிதனுடன் மிக மிக நெருங்கிய தொடர்புடையது. உடலின் எந்தவொரு பாகம் செயல் படினும், செயல் படாவிடினும் காற்றும் அதனை மடை மாற்றும் சுவாச உறுப்புகளும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே தான் இருக்கின்றன.

இரத்த ஓட்டத்தின் போது சுருங்கி விரியும் இதயமானது ‘லப் - டப்’ என்று எழுப்பும் ஒலியே நமக்கு ‘லயமாக’



அமைகிறது. இடைவிடாது நாம் சுவாசிக்கும் போது ஏற்படும் காற்றின் அதிர்வே நமக்கான ‘சுருதி’யாக அமைகிறது. அந்த வகையில் சுருதியும் - லயமும் நாம் உயிர் வாழ்வதற்கான மூலாதாரமாக அமைந்துள்ளது.

‘லயம்’ என்பது ஒழுங்குப்படுத்தப்பட்ட காலப் பரிமாணத்தோடு வரையறுக்கப்பட்ட ஓசை எனலாம். ‘சுருதி’ என்பது இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் ஒழுங்குப்படுத்தப்பட்ட ஓர் ஒலியின் அளவு எனலாம். மனிதமனம் ஓர் நிலையிலின்றி அலைபாயும் தன்மையுடையது. மனிதனது புறச்சூழலுக்கு ஏற்ப அவனுள் ஏற்படும் அதிர்வலைகள் வேறுபடும், மாறுபடும். அது போல ஒலி அலைவுகளின் அதிர்வுகளுக்கு ஏற்ப இராகங்கள் உண்டாகின்றன. இதனை அனுபவத்தால் உணரலாம்.

மனித மன அதிர்வுகளால் உடல் ஒவ்வொரு சூழலிலும் வெவ்வேறு விதமாக வெளிப்படுவது போன்று இசையானது ஒலி அதிர்வுகளின் தன்மைக் கேற்ப பற்பல இராகங்களாக எழுகின்றன.

நம் உடலின் நாடித் துடிப்பும், இருதயத் துடிப்பும், சுவாசத் துடிப்பும் வெவ்வேறு காலப் பரிமாணங்களைக் கொண்டது. சாதாரணமான ஒரு மனிதனுக்கு நாடித் துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 60 முதல் 72 வரை ஏற்படும். இதயத் துடிப்பு ஏறத்தாழ இதே அளவு இருக்கும். ஆனால், சுவாசம் ஒரு நிமிடத்திற்கு ஏறக்குறைய 16 முதல் 19 வரை நடைபெறும். இதனை அறிவியல் மெய்ப்பிக்கும். எனவே நாடிக்கும், இதயத்திற்கும், சுவாசத்திற்கும் தொடர்பு உண்டு எனினும் அவை பல்வேறு காலப் பரிமாணங்களைக் கொண்டுதான் இயங்குகின்றன.

ஒருவன் ஓடிவந்து நின்றவுடன் அவனுக்கு மூச்சு இரைக்கும். அப்போது




அவனின் இதயத் துடிப்பும், நாடித் துடிப்பும், சுவாச நிலையும் வேகமாய் அமையும். சிறிது நேரம் கழித்து மூன்றும் அதனதன் சமநிலைக்கு வந்து விடுகின்றன. இதுவேதான் கோபத்தின் போதும், அதிக உணர்ச்சி வசப்படும் போதும் நிகழ்கிறது. இவ்விதம் தான் இசையில் ஒரு களை, இரண்டு களை, நான்கு களை ஆகியன வேகத்திற்கு தகுந்தார் போல அமைகின்றன.

காலப் பரிமாணத்தின் வேறுபாட்டின் காரணமாகத்தான் மனிதனுக்கு வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகியன வருகின்றன. இதைப் போலவே சங்கீதத்திலும் காலப் பரிமாணம் சரியாக அமையாவிடில் அது இசையாக இருக்காது. இரைச்சலாகத்தான் இருக்கும். இதனை உணர்ந்தே ஒவ்வொரு பாடலுக்கும் ராகத்துடன் தாளத்தையும் அமைத்தனர்.

ஒரு குறிப்பிட்ட பாடலை குறிப்பிட்ட ராகத்தில் பாடும் போது குறிப்பிட்ட தாளத்துடன் பாடுதல் மரபு. அந்த மரபு இன்னும் மாறவில்லை. இனியும் மாறாது. அப்படி மாறினால் அது சங்கீதமாக இருக்காது. ஒழுங்குப்படுத்தப்பட்ட ஓசைக்கே இசை என்று பெயர்.

- திருப்பாம்புரம்




# அகாடெமியின் அடிச்சுவடு



சி.பி.ராமஸ்வாமி ஐயர்

**க**ர்நாடக ஸங்கீத ரஸிகர்களுக்கு (நம் நாடாகட்டும் – வெளிநாடாகட்டும்) டிசம்பர் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் நினைவிற்கு வருவது 'ஸங்கீத சீஸன்'. ஸங்கீத சீஸன் என்றால் நினைவிற்கு வருவது 'மியூசிக் அகாடெமி' என்றால் அது மிகையாகாது. அத்தகைய தொரு தாக்கத்தை ரஸிகர்களிடமும், வித்வான்களிடமும் ஏற்படுத்தி உள்ள ஒரு மாபெரும் இயக்கம் 'மியூசிக் அகாடெமி'. இதன் தொடக்கம் பற்றி இனி பார்ப்போம்.

1920–களில் ஆரம்பமாகும் 'அகாடெமி'யின் சரித்திரத்தை துவக்கக் காரணமாக இருந்தவர்கள் ஏராளமான ஸங்கீத ரஸிகர்களும், வித்வான்களும் தான். இவர்களின் ஆர்வத்தால் 1927–ம் ஆண்டு 'அகில இந்திய சங்கீத ஸம்மேளனத்தில்' இந்திய நாட்டின் பாரம்பரியப் பெருமை வாய்ந்த ஸங்கீதம் வளர்ச்சி பெற, வானுயர் புகழ் அடைய ஒரு 'மியூசிக் அகாடெமி'யினை உருவாக்க முடிவெடுக்கப்பட்டது.

1928–ல் ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்ட கமிட்டியில் உறுப்பினர்களாக பிடாரம் கிருஷ்ணப்பா, அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், பல்லடம் சஞ்சீவராவ், தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை, ப்ரொபஸர் வெங்கடஸாமி நாயுடு, ஜலதரங்கம் ரமணய்ய செட்டி, செய்தூர் ஜமீன்தார் எஸ்.ராமஸ்வாமி அய்யர், W.துரைஸ்வாமி அய்யங்கார், ராவ் பகதூர் C.ராமானுஜாசாரியார், T.L.வெங்கடராம அய்யர், T.V.சுப்பாராவ் மற்றும் ந.மூர்த்தி ஆகிய மேதைகள், அறிஞர்கள், தனவந்தர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

சிற்சில ஆரம்ப வேலைகளுக்குப் பிறகு 1928 ஆகஸ்ட் 18ம் தேதி Y.M.C.A. ஆடிட்டோரியத்தில் சி.பி.ராமஸ்வாமி அய்யர் தொடங்கி வைக்க 'மியூசிக் அகாடெமியின்' அதிகார பூர்வமான ஜனனம் நிகழ்ந்தது. முதலில், சென்னை–1, பூக்கடை ஏரியாவில், 323, தம்புச் செட்டித் தெருவில் தான் மியூசிக் அகாடெமி ஆரம்பிக்கப்பட்டது என்றால் அத்தகவல் பலருக்கும் ஆச்சர்யமாக இருக்கும்.



T.T.கிருஷ்ணமாச்சாரி



முத்தையா பாகவதர்

Dr.V.ராமாராவ் அவர்கள் முதல் பிரசிடெண்ட் ஆக இருந்தார். K.V.கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவருக்கு அடுத்துப் பதவி ஏற்றார். இவரது பதவிக் காலத்தில் அகாடெமியின் செயல்பாடுகள் பரந்துவிரிந்தன. பின் ஸங்கீத கலாநிதி T.L.வெங்கடராம அய்யர், T.S.ராஜம், K.R.சுந்தரம் அய்யர் ஆகியோரின் ஒப்பிலாத சேவை அகாடெமியின் புகழை தூர தேசங்களுக்கும் பரவச் செய்தது.

தம்புச் செட்டித் தெருவில் சிறிய அலுவலக அறையில் இயங்கி வந்த அகாடெமி 1955–ம் ஆண்டு கம்பீரமாகத் திகழும் தற்போதைய சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, மஹாராஜா ஜெயராம உடையார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

T.T.கிருஷ்ணமாச்சாரி அவர்களின் பெருமுயற்சியினால் மியூசிக் அகாடெமியின் பற்பல கனவுகள் நனவாகியது என்ற நன்றிக்காக மெயின் ஆடிட்டோரியத்திற்கு அவரது பெயரிடப்பட்டது. 1965–ம் ஆண்டு G.D.பிர்லா அவர்களால் மெயின் ஆடிட்டோரியம் முழுவதும் குளிரூட்டப்பட்டது.

இதன்பிறகு மியூசிக் அகாடெமியின் மகத்தான சேவைகளை உணர்ந்த ரிலையன்ஸ் நிறுவனம் கிர்லோஸ்கர், அசோக் லேலேண்ட், நல்லி சின்னசாமி டிரஸ்ட், கஸ்தூரி & சன்ஸ் மற்றும் L.R.C. இன்டர்நேஷனல் (லண்டன்) ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் பற்பல மாற்றங்கள் செய்யப்பட்டு தற்போது நாம் காணும் வசதிகளுடன் மியூசிக் அகாடெமி பரிணமிக்கிறது.

பின்னாட்களில் கஸ்தூரி சீனிவாசன் மினி அரங்கம். நூல் நிலையம், ஆர்ட் கேலரி, அரும் பொருட் காட்சியகம் ஆகியன உருவாகின. 1931–ம் ஆண்டு சங்கீதக் கல்லூரி தோற்றுவிக்கப் பட்டது. சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார், சங்கீத கலாநிதி காயக சிகாமணி டாக்டர் எல்.முத்தையா பாகவதர் (அகாடெமி உருவாக முக்கிய காரணகர்த்தா), சங்கீத கலாநிதி முடி கொண்டான் சி.வெங்கட்ராம அய்யர், கே.சி.தியாகராஜன், சந்தியா வந்தனம் ஸ்ரீனிவாசராவ் மற்றும் சங்கீத கலாநிதி டி.எம்.தியாக ராஜன், சங்கீத கலாநிதி ராஜம் அய்யர் ஆகியோர் இதன் பேராசிரியர்களாகப் பணிபுரிந்த மாமேதைகள்.

பின்னாட்களில் சங்கீதக் கல்லூரிக்கு நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை எம்.எஸ்.சுப்பு லெட்சுமி தன் பொற்கரங்களால் திறந்து வைத்தார்.

சங்கீதக் கச்சேரிகள், மாநாடுகள் நடத்துவது மட்டுமின்றி பட்டங்கள் தருவதும் அகாடெமியின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று. ‘சங்கீத கலாநிதி’ மற்றும் 1993–ல் உருவாக்கப்பட்ட ‘சங்கீத கலா ஆசார்யா’ ஆகிய பட்டங்கள் அகாடெமியின் வித்வான்களுக்கும், விதூஷிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

அகாடெமி அவ்வப்போது நடத்தும் லெக்சர் டெமான்ஸ்ட்ரேசன்கள் பயனுள்ளதாக இருக்கும். வெளிநாட்டுக் கலைஞர்கள் நடத்தும் டெமான்ஸ்ட் ரேசன்கள் அக்கலைகளை பயிலும் மாணவ – மாணவியருக்கு பெரிதும் உதவுவதாக அமையும். வெளிநாட்டுக் கலைஞர்கள் டெல்லியின் MANDI HOUSE ஆடிட்டோரியங்களுக்கு அடுத்தபடியாக மதிப்பது நமது மியூசிக் அகாடெமியைத்தான்.

**– ஏவி.ஆர்.வர்மா**

# காவடிச் சிந்து



சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை தமிழகத்தில் நடைபெற்று வந்த சங்கீதக் கச்சேரிகளின் பிற்பகுதியில், வித்வான்கள் ஓரிரண்டு திருப்புகழ்களையும், காவடிச் சிந்துகளையும் பாடுவது வழக்கம். இவற்றிற்குச் 'சில்லரை உருப்படிகள்' என்று பெயர். ராகம், தானம், பல்லவி, சுரம் முதலிய கனமான பகுதிகள் முடிந்த பிறகு பாடப் பெறும் இச் சில்லரை உருப்படிகளை சபையோர் மிகவும் ரசிப்பார்கள்.

தானம், பல்லவி முதலியவற்றைப் புரிந்துகொள்ள முடியாத பாமர மக்கள் கூடச் சில்லரை உருப்படிகளைச் சுவைத்து அனுபவிப்பது வழக்கம். கச்சேரிகளில் காவடிச் சிந்துகளைப் பாடும் மரபு பின்னாட்களில் மறைந்து போனது தமிழின் துரதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும்.

காவடிச் சிந்து பாடவில்லை என்றால் அக்கால ஜனங்கள் ஏமாந்து போவார்கள். ஒரு பெரிய வித்வான் ஓர் ஊரில் கச்சேரி செய்த பின் முடிவில் காவடிச் சிந்து பாடும்படி ஜனங்கள் மத்தியிலிருந்து வேண்டுகோள் குரல் பலமாக எழும்பி இருக்கிறது. வித்வானோ மிக அலட்சியமாக "எனக்கு அதெல்லாம் பாடமில்லை. அதனால் பாட முடியாது" என்று சொல்லி எழுந்து விட்டார்.

வித்வானுக்குப் 'பாடம்' கற்பிக்க நினைத்த ஊர் ஜனங்கள் அவருக்கு சன்மானம் தந்த தட்டில் சன்மானத் தொகையோடு ஒரு அரையணா நாணயம் ஒன்றையும் கூடவே சேர்த்துத் தந்தனர். "இந்த அரையணாக் காசு எதற்கு?" என்று வித்வான் வினவியபோது "நீங்கள் அடுத்தடுத்த கச்சேரிகளுக்குப் போகும் போது எனக்கு பாடமில்லை என்று சொல்லாமல் இருக்க இந்த அரையணாகாசில் ஒரு காவடிச் சிந்து புத்தகம் வாங்கிப் பாடல்களைக் கற்றுக் கொள்ளுங்கள்" என்றனராம். அன்றைய காலத்தில் அப் புத்தகத்தின் விலை அதுதான்.

காவடிச் சிந்து எனப்படும் பிரபந்த வகையைப் பற்றிய குறிப்புகள் எந்தவொரு பழந்தமிழ் நூல்களிலும் இருப்பதாகத் தெரியவில்லை. பெரும்பாலும் இவை

நாடோடிப் பாடல்களுள் சிந்து என்ற வகையைச் சேர்ந்தவை.

தமிழகத்தில் தமிழ்க் கடவுளாகிய முருகன் கோயில் கொண்டிருக்கும் தலங்களுக்கு அடியார்கள் காவடி எடுத்துச் செல்வது தொன்று தொட்ட வழக்கம். அச்சமயம், 'சேமக்கலம்' என்கிற வாத்யத்தை அடித்துக் கொண்டு அவர்கள் பாடிச் செல்லும் சிந்துக்குக் காவடிச் சிந்து என்ற பெயர் அமைந்திருக்கலாம்.


அண்ணாமலை ரெட்டியார்

பிற்காலத்தில் காவடிக் கூட்டங்களுடன் நாதசுரக்காரர்கள் காவடிச் சிந்துகளை வாசித்துக் கொண்டு செல்லும் வழக்கம் ஏற்பட்டது. அடியார்கள் தத்தமது வேண்டுதல்கள்படி பால்காவடி, மச்சக்காவடி, சர்ப்பக் காவடி முதலியவற்றை தோளின் மீது சுமந்து தங்கள் ஊர்களிலிருந்து நடந்தே குறிப்பிட்ட முருகன் கோயில்வரை செல்வார்கள்.

தற்போது தமிழ் இலக்கியத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கும் காவடிச் சிந்துகளின் ஆசிரியர் அண்ணாமலை ரெட்டியார் ஆவார். இவர் சிறந்த தமிழ்ப் புலவர். இவர் இயற்றிய எண்ணற்ற தமிழ் இலக்கிய நூல்கள் தற்போது பிரசுரத்திலும், புழக்கத்திலும் இல்லாத காரணத்தால் இவர் சிந்துகள் மட்டும் இயற்றியவர் என கருதுகின்றனர்.

இந்த அண்ணாமலை ரெட்டியார் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிகுளம் என்ற சிற்றூரில் 1861-ஆம் ஆண்டில் பிறந்தவர். இளம் பிராயத்திலேயே தமிழ்க் கல்வி கற்கத் தொடங்கி பின்னர் யமகம், திரிபு முதலிய சொல்லணிகளும், பொருள் நயமும் அமையச் செய்யுள் இயற்றும் திறன் படைத்தார்.

நல்ல இசையறிவு பெற்றவராதலால் தாம் இயற்றிய பாடல்களை வெவ்வேறு இராகங்களில் பாடிக் காட்டிகேட்போரை மகிழ்விக்கும் ஆற்றல் இவரிடம் அமைந்திருந்தது.

சேற்றூர் ஜமீன்தாராக இருந்த சுந்தரதாசுப் பாண்டியத் தேவரின் ஆதரவில் ரெட்டியார் சில காலம் இருந்து பின்னர் திருவாவடுதுறையை அடைந்து அப்போது பட்டத்திலிருந்த சுப்பிரமணிய தேசிகரைக் கண்டு அவர் மீது தாம் பாடி வந்த 'அரசனகராதியர்' என்ற செய்யுளைச் சமர்ப்பித்தார். அதன் இறுதியிலுள்ள 'அரசன்' என்ற சொல்லுக்குப் பொருள் கூறுமாறு தேசிகர் பணிக்க ரெட்டியார் "அரசன் என்றால் ரசம் இல்லாதவன். சுவையற்ற கோது போன்றவன்" என்று விடை கூறினார். இதனைக் கேட்ட தேசிகர் "நீ சாதியிலும் ரெட்டி அறிவிலும் இரட்டு" என்று கூறி தமது ஆதினத்திலேயே ஓராண்டு காலம் இருக்கச் செய்து இலக்கிய - இலக்கணங்களை கற்பித்தனர்.

பின்னர் ரெட்டியார் ஊற்றுமலை அரசராகிய இருதயாலய மருதப்ப தேவரின் ஆதரவில் அரண்மனைப் புலவராக இருந்து வந்தார். இச்சமயத்தில்தான் ரெட்டியார் தமது இலக்கிய நூல்கள் பலவற்றை இயற்றினார்.

ஊற்றுமலை மன்னரின் ஆதரவில் இவர் இயற்றிய சித்திர கவிகள் பல. அரசர் ஒரு நாள் புலவர்களை எல்லாம் அழைத்து 'சரிகமபதநி' என்ற ஏழெழுத்துக்களுடன் தொடங்கி ஒரு செய்யுள் அமைக்குமாறு கூற ரெட்டியார் ஒருவரே 'சரிகமபதநியேற்குச் சந்து சொலென்பாள்' என்ற செய்யுளை இயற்றினார்.

முருகனது திருக்கோவில்களுக்குக் காவடி எடுத்துச் செல்லும் அன்பர்களின் விருப்பத்திற்கிணங்கி இவர் பல்வேறு சந்தங்களில் ஓசை, நயம், பொருள், இனிமை முதலியவை அமைந்த காவடிச் சிந்துகளைப்



பாடி வழங்கினார் என்று சிலரும், ஊற்றுமலை ஜமீன்தார் ஒருமுறை கழுகு மலைக்குக் காவடி எடுத்துச் சென்ற சமயம் அவருக்கு களைப்பு தோன்றாமல் இருக்க ரெட்டியார் அவர் கூடவே இச் சிந்துக்களைப் பாடியபடியே சென்றார் என்பாரும் உண்டு.

இவர் இயற்றிய ஏனைய நூல்கள் வீரை அந்தாதி, வீரை நவநீதி கிருஷ்ணன் பிள்ளைத் தமிழ், சங்கர நாராயணர் கோயில் திரிபந்தாதி, கருவை மும்மணிக் கோவை முதலியன. ஊற்றுமலை மன்னர் பெயரிலும் இவர் நூற்றுக்கணக்கான தனிப்பாடல்களைப் பாடியிருக்கிறார். இவற்றிலிருந்து ரெட்டியார் யாப்பிலக்கணம் நன்கு கற்ற தமிழ் கவிஞர் என்பது தெளிவாகிறது.

ரெட்டியார் பாடியுள்ள காவடிச் சிந்துகள் தனிப் பாடல்கள் அல்ல. அவை ‘உலா’ எனப்படும் பிரபந்த வகையில் அமையப் பெற்றுள்ளன. இவ்வகைப் பிரபந்தத்தில் பரமாத்மாவை நாயகனாகவும், ஜீவாத்மாவை நாயகியாகவும், சகி அல்லது பாங்கியை குருவாகவும் அமைத்துப் பாடுவது வழக்கம்.

இம் மரபை ஒட்டியே காவடிச் சிந்துகள் அடைவாக ஓர் உலா வடிவத்தில் அமைக்கப் பெற்றுள்ளன.

முதலாவதாக நாட்டை ராகத்தில் பிள்ளையார் துதியுடன், இரண்டாவதாக நாத நாமக்கிரியை ராகத்தில் முருகன் துதியுடன் நூல் ஆரம்பமாகிறது. மூன்றாவது சிந்தில் கழுகு மலையின் வளம் அழகாக வருணிக்கப்படுகிறது.

கழுகு மலையின் எழிலை ரெட்டியார்

“மோது வாரிதி நீரை வாவி விண்

மீதுலாவிய சீதளாகர முகில் பெருஞ்

சிகர முற்று மூருதே - கண்டு

மயிலினஞ் சிறகை விரித்தாடுமே”

என்று பாடுகிறார்.

சந்த அமைப்பிற்காகவும், ஓசை நயத்திற்காகவும் ரெட்டியார் வட மொழிச் சொற்களை தமது சிந்துகளில் ஏராளமாக அமைத்திருக்கிறார். சிந்துகளை நாட்டை, நாத நாமக்கிரியை, ஆனந்த பைரவி, கன்னட பைரவி முதலிய கர்நாடக ராகங்களிலும், காபி, பெஷாக், தேசிய தோடி முதலிய இந்துஸ்தானி ராகங்களிலும் ரெட்டியார் அமைத்திருந்த போதிலும் செஞ்சுருட்டி ராகத்தில் காவடிச் சிந்துக் கென்றே அமைந்த மெட்டே அவற்றிற்குச் தனிச் சிறப்பை அளிக்கிறது. இச் சிறிய ராகத்தின் ரசத்தைப் பிழிந்து தமது காவடிச் சிந்துகளில் அடைத்திருக்கிறார் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

- டி.எஸ்.பி.



# சொல்றவா சொல்லிப்பட்டா...

முதல் உலக மகாயுத்தத்திற்கு முன்பு 'இந்து சங்கீதம்' என்றொரு மாதாந்திர இதழ் வந்து கொண்டிருந்தது. அதில் மிக உயர்ந்த சங்கீதம் சம்பந்தமான ஸ்லோகங்கள் இடம் பெற்றுவந்தன. அவற்றில் இரண்டினை இங்கே விளக்கி உள்ளேன்.

''வாங்மா துருச்சியதே கேயம்
தாதுரித்ய பீதியதே
வாச்சம் கேயம்துகுருதே
யஸ்ஸ வாக்கேய காரக''

சப்தரூபமாகவுள்ள ஸாஹித்யங்கள் மாதா, பாட்டுக்களின் வர்ண மெட்டுக்கள் யாவும் தாது. இவை இரண்டின் பொருளையுமறிந்து பாடுகிறவனே பாடுவதற்கு அதிகாரமுடையவன். இதனால் ஒருவன் ஸங்கீதத்தில் ஸ்வர ஞானம், தாள ஞானம் இவைகளைத் தெரிந்து கொள்வதினால் மாத்திரம் பாட்டின் தொழிலுக்கு அதிகாரியாகிறானில்லை. பாடுகிற பாட்டின் பொருளையும் அவசியம் அறிந்திருக்க வேண்டும். இக்காலத்தில் இந்த ஸ்லோகத்தின் கருத்தின்படி நடப்போர் மிகச்சில வித்வான்களே.

''நாதாத்ச்ச ச்ருதயோ ஜாதா
ஸ்தாப்யாம் ஷட்ஜாதயஸ்வரா;
தேப்யோராக ஸமுத்பன்னோ
கீதம் தஸ்மாச்ச ஜாயதே
அதோ நாதாத் மகம் கீதம்
வாத்யம் கீதானு வர்த்திச்சா

நாதத்திலிருந்து ச்ருதியும், ச்ருதியிலிருந்து ஷட்ஜ முதலான ஸ்வரங்களும், ஸ்வரங்களிலிருந்து ராகமும், ராகத்திலிருந்து கீதமும் உண்டாகிறது. இன்னும் கீதம் நாதரூபமாகவும், வாத்யம் கீதத்தை அனுசரித்தும் இருக்கிறது. அதாவது நிழலானது எதார்த்த ரூபத்தை அனுசரிப்பது போல் வாத்தியத்தில் வாசிப்பது வாய்ப்பாட்டை அனுசரித்தே இருக்க வேண்டும்.

தற்போதைய சில வித்வான்கல் வாத்யங்களில் தங்களுக்குள் ஸ்ரமமன்னியில் எந்த ஸங்கதிகளை உபயோகப்படுத்தக் கூடுமோ அவைகளை ஓர் சிட்டவாக பழக்கப்படுத்திக் கொண்டு அதையே உண்மையான சங்கீதமென்று அவ்வாறே பாடகர்களும் தங்களைப் பின்பற்றி பாட வேண்டுமென்றும் சொல்லத் தலைப்பட்டுவிட்டனர்.

அந்த ஸங்கதிகளை பாடகர் வாயினால் பாடும் போது அதனை கேட்க ரஸாபாஸமுண்டாகுமென்பதை விதரனையான ஞானமுடையோர் ஒப்புக் கொள்வார்கள்.

– டி.பி.கோபாலகிருஷ்ணன்.

# ...மணி கட்டுவது யாரோ?...



“ஸ்ரீ முத்துஸ்வாமி தீஷிதர் அவர்கள் இயற்றிய 'நவக்ரஹ க்ருதி' தொகுப்பின் உருப்படிகளில் ஏழே ஏழு உருப்படிகள் மட்டும்தான் தீக்ஷிதரால் இயற்றப்பட்டது. எஞ்சிய ராகு-கேது இரண்டிற்குமான உருப்படிகள் வேறு ஒருவரால் சென்ற நூற்றாண்டில் இயற்றப்பட்டு சேர்க்கப்பட்டது என்று கூறுவர்.

இவ்வாறான பல முறைகேடுகள், புனைவுகள், இடைச் செருகல்கள் இசைத்துறையில் ஏற்பட்டிருப்பது கடந்து போகக் கூடிய ஒன்றல்ல. இதனால், எந்த ஒன்றையும் நம்பிக்கையோடும், உறுதியுடனும் கற்கவும், கற்பிப்பதற்கும் இயலாத சூழல் இருப்பதனை மறுப்பதற்கில்லை.

எங்கள் மாணவப் பருவத்தில் வாக்கேயக்காரர்கள் பற்றியும், அவர்களுக்கு ஆண்டவன் அருள் பாலித்த விதங்கள் பற்றியும் பல கதைகள் சொல்லப்பட்டன. அதனை நாங்கள் நம்பினோம். ஆனால், இப்போது அந்தக் கதைகளை எங்கள் மாணவர்களுக்கு எங்களால் சொல்ல முடியவில்லை. கூச்சமாக இருக்கிறது. மாணவர்களின் ஏளனப்பார்வை அவர்கள் நம்பவில்லை; ஒப்புக்காக தலையசைக்கிறார்கள் என்பதனை புலப்படுத்திவிடும்.

இப்படி, சங்கீதத்தில் முன்னோரால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உலா வருகிற பல அம்சங்களில் உறுதித் தன்மை இல்லாதது கண்கூடு. வெறுமனே பாடிவிட்டுப் போகிறவர்களுக்கு அவை புலப்படாது. ஆனால்,



ஆய்வுக்கண் கொண்டு அலசுபவர்களுக்கு அப்பட்டமாகத் தெரியவருகிறது.

எனக்கு ஆதிசங்கரரின் நினைவுதான் வருகிறது. குரு கோவிந்த பாதரிடம் கணக்கிலடங்காத ஓலைச் சுவடிகள் குவிந்து கிடந்தன. மலைபோல் காட்சி யளித்த அவற்றை வகைப்படுத்தி சீர் செய்ய முதுமையின் இயலாமை காரணமாக குரு கோவிந்தர் வருத்தத்தில் இருந்தார். இச் சமயத்தில் தான் ஆதி சங்கரர் வேறு நான்கு பேருடன் குரு கோவிந்தரிடம் மாணாக்கர்களாகச் சேருகின்றனர்.

மகிழ்ச்சியடைந்த கோவிந்தர் ஓலைச் சுவடிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பினை ஆதி சங்கரர் வசம் ஒப்படைக்கிறார். சங்கரரும் இதர மாணவர்களின் உதவியுடன் இரவு பகல் பாராது ஓலைச் சுவடிகளை ஆராய்ந்து வகைப்படுத்தி தேவையானவற்றிற்கு உரை எழுதுகிறார்.

மக்கள் சமுதாயத்திற்கு கேடு விளைவிக்கும் என கருதிய பில்லி, சூன்யம், மந்த்ர-தந்த்ர, மாயாஜால வித்தைகள் அடங்கிய சுவடிகளை அழித்து ஆறு மதங்களை நிறுவினார். அதுபோல் இக்கலைத் துறைக்கென ஒரு தெய்வப்பிறவி அவதாரம் எடுத்து வந்து காலப்போக்கில் கலைத்துறையில் மெல்ல மெல்ல ஊடுருவி உறுதிப்பட்டுள்ள பல வேண்டாத விவகாரங்களை அப்புறப்படுத்த வேண்டும் என இறைவனை இறைஞ்சுகிறேன்.

இக்காலத்தில் முன்பு போலன்றி நல்ல வசதி படைத்தவர்களும், மெத்தப் படித்தவர்களும், உலக ஞானம் உணர்ந்தவர்களும் மாணவர்களாக கலைத் துறைக்குள் காலடி வைக்கின்றனர். இருப்பினும், இவர்களும் மனம் மறுத்தாலும் பெரியவர்கள் சொன்னால் பெருமாள் சொன்னது மாதிரி, பெரியவர்களை எதிர்த்துப் பேசக்கூடாது. மரபுகளை மாற்றக் கூடாது என முரண்பாடுகளையும், இடர்பாடுகளையும் நியாயப்படுத்தி



தப்பிதங்களை அடுத்தடுத்த தலைமுறைக்கும் கடத்துகிறார்கள்.

சம்பிரதாயம், பாணி, பரம்பரை என்கிற குறுகிய சொல் வட்டத்துக்குள் இறுகிப்போன மாசு மேலே இவர்களும் ஆசனம் போட்டு அமர்கிறார்கள். இதிலிருந்து விடுபட்டு தேவையான மாற்றங்களை, திருத்தங்களை செய்ய துணிவு வேண்டும். இதனால் பாதிப்பு அடையும் ஒரு பிரிவு எதிர்க்கும் - விமர்சனம் செய்யும். காயப்படுத்தும், கல்லெறியும். ஆனால் விடாது முயற்சிக்க வேண்டும். இப்போதுள்ள சங்கீதக் கலை தொடக்கத்தில் இவ்விதம் இல்லை. பல விமர்சனங்களுக்கு மத்தியில் சில சீர்திருத்தங்களால் செம்மைப்படுத்தப்பட்டது தான்.

பாரதியார் சொன்னது போல் ''இனி ஒரு விதி செய்வோம்; அதை எந்தநாளும் காப்போம்''

- அபயாம்பிகாவின்

'இசை - இயல்' நூலிலிருந்து.

**ஷேக்** சின்னமௌலானா அவர்களுக்கு ‘சங்கீத கலாநிதி’ விருது வழங்கிக் கௌரவித்த போது அவர் தன் ஏற்புரையில் கூறியதாவது:

“கர்நாடக சங்கீதத்தில் சிறப்பான பகுதி என்று பார்த்தால் அது மனோதர்மம். இம் மனோதர்ம சங்கீதத்தை வளர்த்த பெருமை நாதஸ்வரத்தையே சாரும். நாதஸ்வரக் கலைஞர்கள் தங்களின் உயிர் மூச்சைக் கொடுத்து இக் கலையினை வளர்த்தார்கள். வளர்த்தும் வருகிறார்கள். நாதஸ்வரத்தில் ராக ஆலாபனை ஒரு சிறப்பான அம்சமாகும். மணிக்கணக்கில் ராக ஆலாபனை செய்ய முடியும்.

இக்கலையினை பயிலவிரும்பும் ஒவ்வொரு மாணவரும் அவசியம் வாய்ப்பாட்டினை கற்றுக் கொள்ள வேண்டும். சாகித்யம் நம் சங்கீதத்துக்கு மிகவும் இன்றியமையாதது. நாதஸ்வரக் கலையை மங்கள வாத்தியமாக மட்டும் கருதாமல் மேடைக் கச்சேரிகளிலும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.



டி.என்.ஆர்.

# கலைஞர்களை போற்றிய கலைஞன்

இளம் நாதசுவரக் கலைஞர்களுக்கு போதிய வாய்ப்புகளைத் தர வேண்டும் என எல்லா சபாக்களையும் வேண்டுகிறேன். இவ் விஷயத்தில் ஏனைய சபாக்களுக்கு முன்னோடியாக மியூசிக் அகாடமி விளங்க வேண்டும்.

எனக்கு அளிக்கப்பட்டு உள்ள இந்த ‘சங்கீத கலாநிதி’ விருதினை ராஜரத்தினம் பிள்ளை அவர்களுக்கு வழங்கப்பட்ட விருதாகக் கருதி அவரது பொற் பாதங்களில் வைத்து வணங்கி ஏற்றுக் கொள்கிறேன்.

மகாபாரத யுத்தத்தை தனக்கு விவரித்துக் கொண்டிருக்கும் சஞ்சயனைப் பார்த்து திருதிராஷ்டிரன் கேட்கிறார். “தினமும் கௌரவப் படை தோல்வி முகம் காணுகிறதே அப்படியிருக்க கர்ணன் தனது தவ வலிமையால் பெற்ற ஆயுதத்தை ஏன் பாண்டவர்கள் மீது இன்னும் பிரயோகிக்க வில்லை?”

இதற்கு சஞ்சயன் “மறுநாள் அந்த ஆயுதத்தை உபயோகிப்பது என்று ஒவ்வொரு நாளும் நமது தரப்பினர் தீர்மானிக்கிறார்கள். ஆனால், காலையில் புறப்படுகிறபோது அந்த ஆயுதத்தை பயன்படுத்தும் திட்டத்தை மறந்துவிட்டு வழக்கம் போல் சென்று விடுகிறார்கள்” என்றாராம்.

இதுபோலத்தான், ராஜரத்தினம் பிள்ளையின் வாசிப்பைக் கேட்டு மறுநாள் அந்த சங்கதிகளைப் பிரயோகம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்வோம். ஆனால், மறுநாள் சாதகம் செய்யும் போது பிள்ளையவர்களின் சங்கதிகள் எங்களுக்குப் பிடிபடாது. எங்களுடைய வழக்கமான சங்கதிகள் தான் வந்து விழும்.”

*- சென்னை மியூசிக் அகாடமியின் 72-வது ஆண்டு இசை விழாவில் 37 ஆண்டுகளுக்குப் பிறகு நாதஸ்வர தரப்பிற்கு வழங்கப்பட்ட ‘சங்கீத கலாநிதி’ விருதுடன் ஷேக் சின்னமௌலானா தந்த உரை.*



ஷேக் சின்னமௌலானா



ஸ்ரீமதி. அட்ஷயா மகரஜோதி

SANGEETHA SARIGAMAPADANI Regd. No. TN/CC(S) Dn/386/10-12 RNI. No: 67100/97

